1981 ஏப்ரல் 24]

திரு. வி. பாலகிருஷ்ணன் : தலைவரவர்களே, அந்த நகைகளின் உரிமையாளர்கள் பணம் கட்டி, நகைகளைத் திரும்பப் பெறத் தயாராக இருக்கிறார்கள். நகைகள் கோர்ட்டில் இருக்கின்றன. ஆகவே, பணத்தைக் கட்டிவிட்டால், வட்டி இல்லாமல் நகைகளைக் கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, Now the trial is pending. The jewels are the subject matter of the enquiry. எனவே, நீதிமன்ற வழக்கு முடிந்ததும் தரலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. வழக்கு முடிந்ததும் திருப்பித் தரப்படும்.

மணப்பாறையிலுள்ள மாவட்ட நடுவர் நீதிமன்றம்.

*வினா எண் 858—திரு. மே. அ. இராசகுமார்: மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம் மணப்பறையில் மாவட்ட முன்சிப் நீதிமன்றம் அமைப்பது பற்றி கோரிக்கை எதுவும் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் பேரில் அரசு எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) ஆம்.

(ஆ) இக்கோரிக்கையின் மீது முடிவான அறிக்கை உயர்நீதிமன்றத்திலிருந்து எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. மே. அ. இராசகுமார் : தலைவரவர்களே, மணப்பாறை தாலுக்காவிலுள்ள துவரங்குறிச்சியிலிருந்து ஏறத்தாழ 100 கிலோ மீட்டர் தூரத்தில் குளித்தலை இருக்கிறது. இவ்வளவு தூரத்தில் போய் வழக்காடும் கஷ்டத்தைப் போக்க மணப்பாறையில் வெகுவிரைவில் ஒரு கோர்ட் திறக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இராசகுமார் அவர்களும் மற்ற மணப்பாறை வழக்கறிஞர்களும் கொடுத்த மனுவின் பெயரில் உயர்நீதிமன்றத்தின் ஆலோசனை கேட்கப்பட்டிருக்கிறது. அவர்களுடைய பரிந்துரை வந்தபிறகு அதுபற்றி நடவடிக்கை எடுக்கப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
SATYAMEVA JAYATE / ALONE TRIUMPHS

திரு. மே. அ. இராசகுமார்: தலைவரவர்களே, அதுவரையில் தற்சமயம் குளித்தலையில் இருக்கிற இரண்டு கோர்ட்டுகளில் ஒன்றை மணப்பாறையில் ஏற்படுத்தித் தர அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, அதுகுறித்த செயற்குறிப்பு இல்லை. அது குறித்தும் உயர் நீதிமன்றத்தைக் கலந்தாலோசித்து, அவர்களுடைய பரிந்துரையைப் பெற்றுத்தான் முடிவு செய்ய வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மனு தந்தால் பரிசீலிக்கப்படும்.

சோளிங்கர் நகரிலுள்ள மாவட்ட நடுவர் நீதிமன்றம்.

* வினா எண் 859—திரு சி. கோபால் : மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வடாற்காடு மாவட்டம் சோளிங்கர் நகரில் உள்ள டிஸ்டிரிக்டு முன்சீப் கோர்ட்டிற்கு கிரிமினல் வழக்குகளும் நடைபெற First Class Magistrate power கொடுக்கும் திட்டம் ஆய்வில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, தற்போது இல்லை.

திரு. சி. கோபால் : தலைவரவர்களே, தற்போது இல்லை என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். தமிழ் நாட்டிலே இருக்கிற சொந்தக் கட்டிடம் உள்ள கோர்ட்டுகளில் அழகான, வசதியுடைய சொந்தக் கட்டிடம் உள்ள கோர்ட் சோளிங்கர் டிஸ்டிரிக்ட் முன்சீப் கோர்ட். அங்கே பர்ஸ்ட் கிளாஸ் மாஜிஸ்ட்ரேட் பவ்வர் பெற்று, கிரிமினல் வழக்குகள் நடத்தவும் போதுமான வசதி இருக்கிறது. அதற்கு அனுமதி வழங்கலாம் என்று வடாற்காடு மாவட்டம், வேலூரிலிருந்து மாவட்ட நீதிபதியிடமிருந்தும் உயர்நீதி மன்றத்திலிருந்தும் அரசுக்கு கோரிக்கை ஏதுவும் வந்துள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, நீதிமன்றக் கட்டிடம் அழகாக இருக்கலாம். ஆனால் உயர் நீதிமன்றத்திலிருந்து பரிந்துரை வரவில்லை ; பரிந்துரை வந்தால் அரசு பரிசீலிக்கும். அதைவிட 'இன்டகிரேஷன் ஆஃப் ஜுடிஷியரி' முறையை நடைமுறைப்படுத்தும்போது பல டிஸ்டிரிக்ட் முன்சீப் கோர்ட்டுகளுக்கு பர்ஸ்ட் கிளாஸ் மாஜிஸ்ட்ரேட் பவ்வர் அளிக்கப்பட்டு,